**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 4/2020.**
**வழக்கு சாட்சி – எ.சா. 1.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ஜெகதீசன். | ஜாதி | |
| தந்தை பெயர் | கிருஷ்ணசாமி | தொழில் | ஆவண எழுத்தர். |
| கிராமம் | தேனி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 38/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.04.2026.

**(1–வது எதிரி ஆஜர். 2 முதல் 4 வரையிலான எதிரிகள் ஆஜரில்லை. A2 to A4 Personal appearance dispensed. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**எதிரி தரப்பில் முதல் விசாரணை:–**

நான் தற்போது, தேனியில் குடியிருந்துகொண்டு, ஆவண எழுத்தராகப் பணி செய்து வருகிறேன். இந்த வழக்கின் புகார்தாரர் சுப்புராமும், நானும் ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஆவோம். எங்களுக்குள் இருந்த பழக்க வழக்கத்தின் அடிப்படையில் சுப்புராம் என்னிடம் வந்து என்னிடம் பணம் கேட்டார். இவ்வழக்கின் 4–வது எதிரி சுதாகர் என்பவரிடமிருந்து ரூ.2,00,000/– வாங்கி சுப்புராமிடம் கொடுத்தேன். பின்னர், என்னிடமிருந்து 18 பசு மாடுகளை ரூ.8,00,000/– என கிரையம் பேசி, சுப்புராம் என்னிடம் வாங்கிச் சென்றார். மேலும், சுப்பிராம் வங்கியில் கடனை அடைப்பதற்காக, என்னிடம் ரூ.2,00,000/– கடன் வேண்டுமென்று கேட்டார். நான் ரொக்கமாக ரூ.2,00,000/– கடனாகக் கொடுத்தேன். மேலும், சுப்புராம் தேனி, நீதித்துறை நடுவர் விரைவு நீதிமன்றத்தில் நடைபெற்ற S.T.C. No. 11/2017 என்ற வழக்கில், ஜெகநாதன் என்பவரிடம் பெற்றக் கடனை அடைப்பதற்காக ரூ.4,00,000/– என்னிடம் கேட்டார். நான் மேற்படி நபருக்கு ரூ.4,00,000/–த்தைக் கடனாகக் கொடுத்தேன். மொத்தம் ரூ.16,00,000/– கடனாகக் கொடுத்திருந்தேன். மேற்படி கடனை சுப்புராம் அவரது சொத்தை வங்கியில் அடைமானம் வைத்து செலுத்திவிடுவதாகக் கூறியிருந்தார். பின்னர்,

பணத்தை கொடுக்காமல் காலம் கடத்திவந்தார். பின்னர், அவருக்குப் பாத்தியப்பட்ட சொத்தை எனது பெயருக்கு பொது அதிகாரப் பத்திரம் எழுதிக்கொடுத்தார். அன்று மாலை ஊரில் சென்று, எழுதிக் கொடுத்த பொது அதிகாரப் பத்திரத்தை இரத்து செய்துவிடுவேன் என கூறியுள்ளார். அதனால், மறுநாள் பொது அதிகாரப் பத்திரத்தைப் பயன்படுத்தி மேற்படி சொத்தை நான், எனது அம்மாவின் பெயருக்கு கிரையம் எழுதி வைத்துவிட்டேன். எனக்கு தரவேண்டிய ரூ.16,00,000/–த்தைக் கொடுத்துவிட்டு, அவருக்குச் சொந்தமான சொத்தை மறுகிரையம் செய்துகொள்ள வேண்டியது என எங்கள் சமுதாயப் பெரியோர்களை வைத்து பேசிக்கொண்டோம். 03.08.2018 ஆம் தேதி சொத்தை கிரையம் பெற்றுக்கொள்வதாகக் கூறியிருந்தார். ஆனால், அவ்வாறு கிரையம் பெற்றுக் கொள்ளாமல் கடந்த 20.08.2018 ஆம் தேதியன்று, அவரே எனக்குக் கொடுத்த பொது அதிகார ஆவணத்தை இரத்து செய்வதாக ஒரு அறிவிப்பு அனுப்பினார். **கடந்த 20.08.2018 ஆம் தேதியன்று புகார்தாரர் எனக்கு அனுப்பிய அறிவிப்பின் ஒளிநகல் எ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. (அரசுத் தரப்பில் மேற்படி ஆவணம் நகல் என்பதால் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. மேலும், அ.சா.1 நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டும், அவர்மூலமாக கொடுக்கப்பட்டதாகக் குறிப்பிடப்படும் அறிவிப்பை அன்றைய தினம் குறுக்கு விசாரணையில் ஆவணமாக குறியீடு செய்யப்பட்டிருக்கலாம். அவ்வாறு செய்யாமல் புதிதாக உற்பத்தி செய்து ஒரு நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது).** மேலும், அன்றைய தேதியிலேயே எங்கள்மீது உரிமையியல் வழக்கு தாக்கல் செய்யப்போவதாக வழக்கறிஞர் அறிவிப்பு ஒன்றை அனுப்பினார். **கடந்த 20.08.2018 ஆம் தேதியன்று புகார்தாரர் எனக்கு அனுப்பிய அறிவிப்பின் ஒளிநகல் எ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. (அரசுத் தரப்பில் மேற்படி ஆவணத்தில் புகார்தாரரின் கையொப்பம் இல்லை என்றும், சான்றிட்ட நகல் இல்லை என்றும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது).** அதன்பின்னர், கடந்த 23.08.2018 ஆம் தேதி, அவரது மனைவி விஜயலெட்சுமி என்பவர்மூலம் வீரபாண்டி காவல் நிலையத்தில் நான் அவரது மனைவிக்கு காசோலை

கொடுத்ததுபோல், புகார் ஒன்று கொடுத்தார். மேற்படி புகாரை விசாரித்து, மேல்நடவடிக்கை எடுக்காமல் வீரபாண்டி காவல் நிலையத்தினர் வைத்திருந்தார்கள். அதனை எதிர்த்து வீரபாண்டி காவல் நிலையத்திற்கு F.I.R. Direction உத்தரவு கோரி புகார்தாரர் விஜயலெட்சுமி அவர்கள் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை, மதுரையில் Crl.O.P.(MD) No. 16519/2018 என்ற மனுவைத் தாக்கல் செய்து, அம்மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. **மேற்படி 23.08.2018 ஆம் தேதியன்று புகார்தாரின் மனைவி விஜயலெட்சுமி என்பவர் வீரபாண்டி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் சான்றிட்ட நகல் எ.சா.ஆ.3 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் கடந்த 29.08.2018 ஆம் தேதி சுப்புராம், தேனி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் பதிவுத் தபால் மூலம் தேனி மாவட்டக் குற்றப் பிரிவு மற்றும் நில அபகரிப்புப் பிரிவில் புகார் அனுப்பினார். அந்தப் புகாரின் அடிப்படையில் கடந்த 07.09.2018 ஆம் தேதியன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தேனி, மாவட்டக் குற்றப் பிரிவிலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி விசாரணையில், உரிமையியல் நீதிமன்றத்தின்மூலம் பரிகாரம் தேடிக் கொள்ளுமாறு தேனி, மாவட்டக் குற்றப் பிரிவினர் அறிவுறுத்தினர். தேனி, நில அபகரிப்புப் பிரிவில் கொடுத்த புகாரில்பேரில், மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை, மதுரையில் Crl.O.P.(MD) No. 16528/2018 என்ற மனுவினைத் தாக்கல் செய்து, மேற்படி மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. **நில அபகரிப்புப் பிரிவிலிருந்து அழைப்பாணை மற்றும் விசாரணை சம்பந்தமான ஆவணங்கள் எ.சா.ஆ.4 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி ஆவணத்திற்கும், இந்த வழக்கிற்கும் தொடர்பு இல்லை என ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது).** அதன்பின்னர், தேனி நகர் காவல் நிலைய, காவல் ஆய்வாளரிடம் கடந்த 03.09.2018 ஆம் தேதி மீண்டும் ஒரு புகார் கொடுத்துள்ளார். மேற்படி புகாரின்பேரில், எங்களுக்கு எந்தவித அழைப்பாணையும் சார்பு செய்யப்படவில்லை. பின்னர், நாங்கள் தேனி காவல் நிலையத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் மனுச் செய்தபோது, புகார்தாரர் புகார் கொடுத்துள்ளதாவும், அது விசாரணையில் இருந்து வருவதாகவும்

தெரிவித்தார்கள். கடந்த 07.12.2018 ஆம் தேதி துணைக் காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் ஒரு புகார் கொடுத்து, அதன்பேரில், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்பின்னர் கடந்த 28.12.2018 ஆம் தேதியன்று என் அம்மா பெயரில் ஏற்பட்ட பட்டாவை இரத்து செய்யுமாறு பெரியகுளம், வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் மனுச் செய்திருந்தார். அந்த மனுவை விசாரித்த பெரியகுளம், வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், நீதிமன்ற உத்தரவுப்படி பட்டா மாறுதல் உத்தரவு பெற்றுக்கொள்ளுமாறு மனுவை முடித்துவைத்தார்கள். சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, ஸ்ரீரெங்காபுரம் கிளையில் அடகு வைத்திருந்த புகார்தாரரின் பத்திரத்தை அவரே மீட்டுக்கொண்டுவந்து, எனக்குப் பவர் பத்திரம் எழுதிக் கொடுத்தார். ஆனால், அனைத்து இடங்களிலும் நானே புகார்தாரரின் கையெழுத்துக்களைப் போட்டு மோசடிசெய்து, பவர் பத்திரம் எழுதிக் கொண்டதாகப் புகார் கொடுத்துள்ளார். கடந்த 03.12.2018 ஆம் தேதியன்று, தேனி காவல் நிலையத்தில் கொடுத்த புகாருக்கும், இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.சா.ஆ.1 புகார் மனுவிற்கும் இடையே நிறைய வேறுபாடுகள் இருந்தன. மேற்படி பத்திரம் வங்கியில் இருந்த சமயத்திலேயே புகார்தாரர் எனது அலைபேசி எண்ணைப் பயன்படுத்தி தேனி காவல் நிலையத்திற்கு ஆன்–லைனில் மேற்படி ஆவணம் தொலைந்துவிட்டதாக புகார் கொடுத்துள்ளார். மேலும், வேறொரு வழக்கறிஞர்மூலம் என்மீது மேற்படி புகார்தாரருக்குச் சொந்தமான வங்கியில் இருக்கும்போதே எனது அலைபேசி எண்ணைப் பயன்படுத்தி வேறொரு நபரின் பெயரில் நான் புகார் கொடுத்ததாக என்மீது புகார் கொடுக்கப்பட்டு, தேனி காவல் நிலையக் குற்ற எண். 432/2018 ஆகப் பதிவு செய்யப்பட்டது. மேற்படி வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, C.C. No. 23/2019 என இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டது. மேற்படி வழக்கை எதிர்த்து மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை, மதுரையில் குற்ற இறுதி அறிக்கையை இரத்து செய்யுமாறு Crl.O.P.(MD) No. 18717/2019 என்ற மனுத் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி மனு கடந்த 16.02.2022 ஆம் தேதியன்று அனுமதிக்கப்பட்டு, மேற்படி C.C. No. 23/2019 என்ற என் மீதான வழக்கு

முடிக்கப்பட்டது. கடந்த 21.12.2020 ஆம் தேதியன்று சுப்புராமின் மனைவி விஜயலெட்சுமி என்பவரின் வீட்டின் அசல் ஆவணத்தை நான் பிடிங்கிக்கொண்டதாக, தேனி நகர் காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்துள்ளார். அதன் அடிப்படையில் 25.12.2020 ஆம் தேதியன்று, என்மீது தேனி நகர் காவல் நிலையக் குற்ற எண். 4026/2020 என்ற முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு தேனி, கூடுதல் மகிளா நீதிமன்றத்தில் C.C. No. 178/2021 எனக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அவ்வழக்கு கடந்த 08.05.2023 ஆம் தேதியன்று மேற்படி வழக்கில் நான் குற்றவாளி இல்லை என தீர்ப்பளிக்கப்பட்டு, நான் விடுதலை செய்யப்பட்டேன். புகார்தாரரின் மாமனார் சீனிவாசன் என்பவரை நான் தாக்கியதாகக் கூறி, வீரபாண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு, தேனி, நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் C.C. No. 330/2018 எனக் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இவ்வழக்கில் 1–வது எதிரியான எனக்கு 90 நாட்கள் சிறைத் தண்டனையும் மற்றும் ரூ.11,000/–ம் விதிக்கப்பட்டது. மேற்படி தீர்ப்பை எதிர்த்து, மாண்புமிகு தேனி மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்குத் தாக்கல் செய்து, அவ்வழக்கில் நிரபராதி என நான் விடுதலை செய்யப்பட்டேன். மேலும், தேனி, சார்பு நீதிமன்றத்தில் புகார்தாரர் மேற்படி சொத்து, அவருக்குப் பாத்தியப்பட்டது என விளம்புகைப் பரிகாரம்கோரி வழக்குத் தாக்கல் செய்து, அவ்வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. புகார்தாரர், எங்களது அனுபவத்தில் உள்ள சொத்தை இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளைப் பரிகாரம்கோரி, புகார்தாரர்மீது என் அம்மா அசல் வழக்கு எண். 208/2018 என்ற வழக்கு தாக்கல் செய்தார். மேற்படி வழக்கில் கடந்த 22.10.2018 ஆம் தேதியன்று புகார்தாரர் அவரது தரப்பில் வக்காலத்து தாக்கல் செய்துள்ளார். புகார்தாரருக்கு அப்போது, தேனியில் D.S.P.–யாக இருந்த முத்துராஜ் என்பவருக்கும் நெருங்கிய பழக்கம் இருந்து வந்தது. அதனடிப்படையில்தான், என்மீது புகார்தாரர் தேனி காவல் நிலையத்தில் கொடுத்த புகார்கள் கொடுத்து, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பொய்யாக வழக்கு நடந்து வருகிறது.

**(எதிரி தரப்பில் ஆவணங்களைக் குறியீடு செய்வதற்காக,எதிரி தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது).**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.04.27 18:43:22 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**